# சக்தி சங்கமம்

20- அக்- 2020
கமலம்-1, இதழ் -23

மங்களபுரி டைம்ஸ் - பிரதி செவ்வாய் கிழமை








## 108 சக்தி பீட ஆலயம், மங்களபுரி, கண்ணன்தாங்கல்.

### ஆனந்தம் பெறுவது எப்படி - ஸ்ரீ மஹா பெரியவா அருளியது

பணம், படிப்பு, செல்வம் மற்றும் அன்றாட வாழ்க்கைக்கு தேவையான சந்தோஷங்கள் எல்லாம் நமக்கு இருக்கலாம் ஆனால் அதிருப்தி, கோபம், பொறாமை, அழுகை நமக்குள் இருந்துவிட்டால் ஆனந்தம் என்ற அம்ருதத்தை நம்மால் அனுபவிக்க முடியாது. நம் மனசிலிருந்து இந்த கெட்ட உணர்ச்சிகள், அசுத்தங்கள் போக்க பிரார்த்தனை செய்யவேண்டும்.

**இந்த வருட சாரதா நவராத்ரி - சக்தி ரதத்தில் அன்னை ஸ்வர்ண காமாக்ஷி பவனி:** ஸ்ரீ குருஜி "ஸ்வர்ண காமாக்ஷி தேவி அனைத்து தெய்வங்களிலும் முதன்மையானவர் ஏனெனில் பராசக்தி அல்லது மூலம் இதனாலேயே ஸ்ரீ ஆதி சங்கரர் அத்வைதத்தை பிரசாரம் செய்தாலும் அந்த உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும் அன்னை ஸ்ரீ காமாக்ஷி தேவியின் பெரும் உபாசகராக இருந்தார். இந்த அன்னை தன்னுடைய பக்தர்களுக்கு சோதனைகள் கொடுப்பார் சோதிப்பார் ஆனால் தன்னை பூரணமாக சரணாகதி அடைந்த பக்தர்களை மேன்மையடைய செய்வதில் இந்த அன்னைக்கு நிகர் வேறு எந்த தெய்வமும் இல்லை."
நவராத்ரி அன்னை பராசக்திக்கு மிகவும் உகந்த நாட்கள் அப்போது எல்லா கலைகளினாலும் உபசாரம் செய்து பக்தர்கள் தம்முடைய க்ருத்ஞையை (மேலான நன்றி) தெரிவிப்பது நம் மரபு. இதன்படியே அன்னைக்கு சக்தி ரதம் அமைத்து தினமும் மாலையில் புதிய விசேஷ அலங்காரங்கள் செய்து சக்திவல பாதையில் அன்னை ஸ்ரீ ஸ்வர்ண காமாக்ஷி வலம் மேள தளங்களுடன் வலம் வருகிறார். புன்சிரிப்போடும் அழகு கொஞ்சும் அன்னையின் இனிய வதனத்தை காணக்கண் கோடி வேண்டும்!!.

**108 சக்தி பீடம் பற்றி அறிவோமா**
**சக்தி பீடம் 23 : பத்ரேஸ்வரி தேவி :- க்ஷேத்ரம்: பத்ரை**

பகவான் வேத வ்யாஸர் குறிப்பிட்ட 23 வது சக்தி பீட ஸ்தலம் பத்ரை இன்றைய குஜராத் மாநில கட்ச் மாவட்டத்தில் கடலோரம் இருந்த க்ஷேத்ரம் ஆனால் தேவியின் புராதனமான சக்தி பீட ஆலயம் இப்போது மறைந்து விட்டது. நம் மங்களபுரி க்ஷேத்ரத்தில் இந்த சக்தி தேவியின் சிற்பம், சிற்ப சாஸ்திர முறைப்படி அமைக்கப் பட்டுள்ளது.

அன்னை அமர்ந்த கோலத்தில் நான்கு கைகளுடன் சேவை சாதிக்கிறார். தன்னுடைய இடது கரங்களில் பக்தர்களுக்கு தன்னுடைய வரத்தையும் தனத்தையும் வலதுகரங்களில் அபயம் மற்றும் மாதுளம்பழத்தையும் ஏந்தியுள்ளார். அன்னை அனைத்து மங்களங்களையும் அளிக்கும் சக்தி தேவியாவார். மாதுளை பழம் விசேஷமானது அன்னையே மாதுளம் பூ நிறத்தவள் என்று அபிராமி அந்தாதியும் லலிதா சஹஸ்ரநாமமும் கூறுகிறது.

Navratri donors can do bank transfer directly to Shree Kamakshi Kaingarya Trust, Canara Bank Maduramangalam branch, Bank Account No. 1357201000156 IFSC Code- CNRB0001357.

**ஸ்ரீ குருஜியின் அம்ருத வாணி: மனதை குழப்பமில்லாமல் வைத்து கொள்வது எப்படி?**
மனது தான் மனிதனின் எல்லா அவஸ்தைகளும் காரணம். மனது பக்குவமடைய பயிற்சிகள் தொடர்ந்து செய்ய வேண்டும், பயிற்சியின் மூலம் மனம் ஒரு நிலைப்படும் பின் அமைதி கிடைக்கும். மன அமைதி நம் செயல்கள் மூலமே கிடைக்கும் (வெளியிலிருந்து அல்ல). அதற்க்கு சுகம் துக்கம் வெற்றி தோல்வி, ஏற்ற இறக்கம் என்பதை சம நிலையோடு எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு செயல் படும்போது வைராக்கியம் கிடைக்கும் அதன் மூலம் மனம் செம்மை பெறும். மனதில் திரும்ப திரும்ப குழப்பங்கள் வராமல் இருக்க சிறு சிறு விஷயங்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை தவிர்க்கவேண்டும்.

**தெரிந்த மஹான் தெரியாத தகவல் ஸ்ரீ பாஸ்கரராயர்.**
**தன்னுடைய வாழ்க்கையை தானே செதுக்கிக்கொள்ளும் பேறு விதிவிலக்காக சிலருக்கே கிடைக்கும்.**
**ஸ்ரீ ராயர் தன்னுடைய வாழ்க்கையின் குறிக்கோள்களாக நான்கு விஷயங்களை எடுத்துக்கொண்டு செய்தார் என்று சொல்லலாம்:**
1. **பராசக்தியின் உபாசனை முறைகளை தூய்மை படுத்தி வேதம் சொன்ன வழியில் நிலைநாட்டியது.**
2. **வேதத்தையும் ஆகமங்களையும் இணைத்து செயல் பட செய்தது.**
3. **தந்திர சாஸ்திரங்களுக்கு வேதத்தில் குறிப்பிட்ட மீமாம்ஸ சாஸ்திரப்படி படிக்கவைத்து.**
4. **பழம்பெரும் ஆலயங்களை புதுப்பித்து மக்களுக்கு அர்ப்பணித்து.**

©Newsletter published by Shree Kamakshi Kaingarya Trust, Chennai. Visit us @ www.kamakshiswami.org.